பக்கங்கள்:-15

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 03 | செவ்வாய்க்கிழமை | 16.04.2024 | அதிர்வு 259 |
|---|---|---|---|---|---|

## ரணில் - மஹிந்த நேரில் சந்திப்பு

### பஸிலும் பங்கேற்பார்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன 06▶

# எலும்புத்துண்டுக்காகத் தமிழினத்தை காட்டிக் கொடுத்தவரே சித்தார்த்தன்!

## அவருக்கு ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் தாற்பரியம் புரியவே மாட்டாது என்று சுகாஷ் பதிலடி

(ந.லோகதயாளன்)

"அரசு வீசிய எலும்புத்துண்டுகளுக்காகத் தமிழினத்தைக் காட்டிக் கொடுத்த புளொட் தலைவர் சித்தார்த்தனுக்கு ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் தாற்பரியம் புரியாது. தமிழ்த் தேசிய முன்னணியை விமர்சிக்கும் தகுதியும் அவருக்குக் கிடையாது." 06▶



# விக்டோரியா நீர்த்தேக்கத்தில் மூழ்கி இளம் தம்பதியினர் பரிதாப மரணம்

## காப்பாற்ற முயன்ற நபரும் உயிரிழப்பு



தெல்தெனிய கும்புக்கந்துர பகுதியில் விக்டோரியா நீர்த்தேக்கத்தில் மூழ்கி பெண் ஒருவர் உள்ளிட்ட மூவர் உயிரிழந்துள்ளனர்.

திஹாரிய பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட தம்பதியினர் தெல்தெனிய பகுதியிலுள்ள தமது உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தபோது விக்டோரியா நீர்த்தேக்கத்தில் நீராடச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

23 வயதான கணவன், 22 வயதான மனைவியும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

நீரில் மூழ்கியவர்களைக் காப்பாற்றுவதற்காக நீர்த்தேக்கத்தில் குதித்த 06▶

## இலங்கை அரசு - சர்வதேச கடன் பத்திரதாரர்கள் இரண்டு விடயங்கள் தொடர்பில் இணக்கப்பாடு



கடந்த மாத இறுதியில் இலண்டனில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இலங்கை அரசுக்கும் சர்வதேச கடன் பத்திரதாரர்களுக்கும் இடையில் இரண்டு விடயங்கள் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டது என்று ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு 06▶



நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பெரும் மன உளைச்சலுடன் இருக்கின்றார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

பொது வேட்பாளர் விவகாரத்தை ஒட்டித் தான் முன்னெடுத்த முயற்சிகளை ஏனைய தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகள் எல்லாம் ஒன்று சேர்ந்து தமது முதுகில் குத்தி வீழ்த்தி விட்டன என்பது போன்ற ஆதங்கத்தில் அவர் இருக்கின்றாராம்.

அதனால் பொது வேட்பாளர் விவகாரத்தை ஒட்டி தாம் ஆரம்பித்த முன்முயற்சிகளை எல்லாம் தாம் அழைத்த கூட்டத்துக்கு வந்திருந்த பத்தி எழுத்தாளர்கள், பொது அமைப்பினரிடம் கையளித்து விட்டு, அந்த முன்முயற்சிகளில் 06▶

# மின்னல் தாக்கங்கள் தொடர்பில் அவதானம் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை



மழையுடன் ஏற்படக்கூடிய பலத்த மின்னல் தாக்கங்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேல், சபரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் கண்டி மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மழை பெய்யும் வேளையில் பலத்த மின்னல் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாகவும், இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் மக்களை அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, மின்னல் தாக்கத்துக்கு உள்ளான நபர்களுக்கு அளிக்க வேண்டிய முதலுதவி தொடர்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் விசேட தர தாதி சந்தியா கருணாதாச அறிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பகுதியை 30 முதல் 45 நிமிடங்கள் வரை ஓடும் நீரில் கழுவி பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பண்டிகைக் காலத்தில் கோழி இறைச்சி விலையை வர்த்தகர்கள் தன்னிச்சையாக உயர்த்துகின்றனர்

## நுகர்வோர் குற்றச்சாட்டு

பண்டிகைக் காலத்தில் கோழி இறைச்சியின் விலையை வர்த்தகர்கள் தன்னிச்சையாக உயர்த்தி வருகின்றனர் என நுகர்வோர் குற்றஞ்சுமத்துகின்றனர்.

அத்துடன், இவ்வாறான பின்னணியில் சந்தையில் முட்டையின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது.

பண்டிகைக் காலத்தில் கோழி இறைச்சி மற்றும் முட்டைகளை குறைந்த விலையில் வழங்குவதாக அரசாங்கம் உறுதியளித்திருந்து இருந்த போதிலும் அவ்வாறான நிலைமை சந்தையில் காணப்படவில்லை என மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தற்போது சந்தையில், ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சி 1,400 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக ஒரு கிலோகிராம் கோழியிறைச்சி 1,100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

இதேவேளை, முட்டை ஒன்றின் விலை 60 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. முன்னதாக சந்தையில் உள்நாட்டு முட்டை ஒன்று 38 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

பண்டிகைக் காலத்தையடுத்து முட்டையின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், முட்டையின் விலை மீண்டும் அதிகரித்தால், இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்யப் போவதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ அறிவித்துள்ளார்.



# வாகன இறக்குமதிக்கு விரைவில் அனுமதி

நாட்டில் வெளிநாட்டு செலாவணி ஒதுக்கம் அதிகரித்துள்ள நிலையில், இறக்குமதி கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்த்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ருவன்வெல்ல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், எதிர்காலத்தில் தேவைகளுக்கு ஏற்ப வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிகளும் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போது 5 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான வெளிநாட்டு ஒதுக்கம் பேணப்படுவதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.



# கொழும்பு - கோட்டை ரயில் நிலையத்தின் முதலாவது மேடையில் மோதி ரயில் விபத்து

கொழும்பு – கோட்டை ரயில் நிலையத்தின் முதலாவது மேடையுடன் மோதி ரயில் ஒன்று விபத்துக்குள் ளாகியுள்ளது.

ரயில் பணியாளர்கள் உரிய இடத்தில் ரயிலை நிறுத்தத் தவறியமையினால், இந்த விபத்து நேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தினால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என ரயில்வேத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு – கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து நேற்று பிற்பகல் 2.35 அளவில் சிலாபம் நோக்கி பயணிக்க விருந்த ரயிலே இவ்வாறு விபத்துக் குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தினால் ரயில் போக்கு வரத்துக்கு எந்த பாதிப்பும் ஏற்பட வில்லை. திணைக்கள மட்டத்தில் விசார ணைகள் முன்னெடுக்கப்பட்டுள் ளன.




# இலங்கைக்கு வெங்காய ஏற்றுமதி தடையை நீக்கியது இந்திய அரசு!

இலங்கைக்கான வெங்காயம் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடையை இந்தியா நீக்கியுள்ளது.

அத்துடன், 10 ஆயிரம் மெட்ரிக் தொன் வெங்காயத்தை இந்தியா இலங் கைக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

இந்த வெங்காய ஏற்றுமதியுடன், இலங்கைக்கான வெங்காயம் மீதான ஏற்றுமதி தடை நீக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ் தானிகராலயம் தெரிவித்துள்ளது.



# மட்டக்களப்பில் கல்லாறில் தமிழரசின் மே தின நிகழ்வு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டத்தினுடைய தொழிலாளர் தினம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தின் கல்லாற்றில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தினுடைய தொழிலாளர் தின நிகழ்வுகளை நடத்துவது தொடர்பாகக் கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மாவட்ட கிளைக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தில் அதனை நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

அதன் பிரகாரம், நேற்றைய தினம் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் அலுவலகத்தில் கட்சியின் பட்டிப்பளை பிரதேச கிளை, வெல்லாவெளி பிரதேசக்கிளை மற்றும் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச கிளை நிருவாகத்தினர் இணைந்து இவ்வருடம் மே தினத்தை மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தின் கல்லாற்றில் மே முதலாம் திகதிவ்பிற் பகல் 2.00 மணிக்கு நடத்துவது எனத் தீர்மானித்தனர். அது தொடர்பான வேலைப்பகிர்வுகளும் அங்கு வைத்தே மேற்கொள்ளப்பட்டன.








# தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்திய எட்டு மீனவர்கள் மூதூர் உப்பாறுக் கடலில் கைது

தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபட்ட எட்டுக் கடற்றொழிலாளர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்று முன்தினம் மாலை மூதூர், உப்பாறு கடற்பகுதியில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

இலங்கைக் கடற்பரப்பில் இடம் பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காக இலங்கைக் கடற்படையினர் கடற்பரப்பில் அடிக்கடி ரோந்து நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை வழமை.

அதன்படி, நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் போது உப்பாறு கடற்பகுதியில் சந்தேகத்திற்கிடமான படகு ஒன்று இருப்பது கண்டறியப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, அந்தப் படகில் தடை செய்யப்பட்ட கடற்றொழில் சாதனங்களைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபட்டமை தெரிய வந்தது. இதனையடுத்து



கடற்றொழிலில் ஈடுபட்ட அந்த எட்டு பேரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பயன்படுத்திய படகு மற்றும் தடை செய்யப்பட்ட கடற்றொழில் வலைகள் என்பன கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள், 23 தொடக்கம் 63 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் அவர்கள் கிண்ணியா வாசிகள் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்நிலையில் எட்டு சந்தேகநபர்களும் கைப்பற்றப்பட்ட படகு மற்றும் தடை செய்யப்பட்ட கடற்றொழில் உபகர ணங்கள் போன்றவற்றுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மூதூர், கடற்றொழில் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொன்மையான கடவுள் சிலையை விற்க முயன்ற இரண்டு பேர் கைது

முல்லேரியா பிரதேசத்தில் இரத்தினக் கற்களால் செய்யப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் தொன்மையான கடவுள் சிலையை விற்பனை செய்ய முயன்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லேரியா பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் அங்கொட மற்றும் கடுவெல பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, அந்தக் கடவுள் சிலை தொடர்பில் தொல்பொருள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பில் முல்லேரியாப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# எட்டு வீதி விபத்துக்களில் பத்து பேர் பரிதாப மரணம்

## 24 மணிநேரத்தில் கோரச் சம்பவங்கள்

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கடந்த 24 மணித்தியாலங்களில் இடம்பெற்ற எட்டு வீதி விபத்துக்களில் பத்து பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர்.

புஸ்ஸல்லாவ மற்றும் ஹாலி – எல ஆகிய இடங்களில் இடம்பெற்ற இரண்டு விபத்துக்களில் நால்வர் உயிரிழந்துள்ளதுடன், மஹியங்கனை, கிரிந்திவெல, அம்பலாந்தோட்டை, பூகொட, மாத்தறை மற்றும் தனமல்வில ஆகிய இடங்களில் இடம்பெற்ற ஆறு வெவ்வேறு விபத்துக்களில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

எட்டு வீதி விபத்துக்களில் ஐந்து விபத்துக்களுக்கு வாகனங்கள் வீதியை விட்டு விலகிச் சென்றமையே காரணம் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்து அவர் மெல்ல ஒதுங்கத் தயாராகி விட்டார் என்று கேள்வி.

'சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது' என்பார்கள். ஆனால் அரசியல் வாதிகள் அப்படி அல்லரே. அவர்களுக்கு நப்பாசை அதிகம் உண்டு. அரசியல்வாதி பூனைகள் சூடு கண்டாலும் மீண்டும் பாலை கண்டதும் அடுப்பங்கரையைத் தேடி ஓடும். அவற்றின் நப்பாசை விடாது.

விக்னேஸ்வரின் முடிவும் அப்படித் தான் இருக்கும்....!

+ + +

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவின் கூட்டம் 20ஆம் திகதி சனிக்கிழமை என்று என் பத்தியில் எழுதி இருந்தேன். அது இப்போது ஒரு நாள் முற்போடப் பட்டிருப்பதாகத் தகவல்.

அது வரும் 19ஆம் திகதி வெள்ளிக் கிழமை வவுனியாவில் நடக்கின்றது. கட்சிக்கு எதிரான வழக்கு, பொது வேட்பாளர் நிறுத்தம் போன்ற முக்கிய விவகாரங்கள் குறித்து இக்கூட்டத்தில் பேசி முடிவெடுக்கப்பட இருக்கின்றது எனக் கூறப்பட்டது.

+ + +

கனடாவில் வசிக்கும் பிரபல ஆங்கில பத்தி எழுத்தாளரான நண்பர் டி.பி. எஸ்.ஜெயராஜின் கட்டுரை ஒன்றை வாசித்தேன்.

காகம் வைத்திருந்த வடையை தந்திர சாலி நரி பாடக் கேட்டுப் பறித்த நமது சிறு வயதுக் காலக் கதையை குறிப்பிட்டு, அது நவீன வடிவத்தில் இப்போது கட்டவிழ்வதாக அழகாகச் சொல்லி இருக்கின்றார் அவர்.

சிங்களத்தில் 'கபுடா' என்றால் காகம். தென் இலங்கையில் இப்போது 'கபுடா' என அழைக்கப்படும் காகம் யார் என்பது நமக்குத் தெரியும். அந்தக் காகத்தின் ஆதரவாளர்கள் அது ஏழு மூளை கொண்ட காகம் என்று கருதுகிறார்கள் எனக் குறிப்பிடுவதன் மூலம் காகம் யார் என்பதை தெளிவாக அடையாளம் காட்டுகிறார் அவர்.

இலங்கை அரசியலின் இன்றைய ராஜாவான 'கிழட்டு நரி' யார் என்பதையும் குறிப்பால் உணர்த்துகின்றார். அதுவும் நமக்கு நன்கு தெரிந்தது தான்.

வடையைக் காகத்திடமிருந்து பறித்த நரியின் கதைக்கு பதிலாக, இங்கு நரியிடமிருந்து சிலவற்றைப் பறித்துக் கொள்ள காகம் எல்லா மார்க்கங்களையும் உபயோகித்து பார்த்து தோல்வியுற்றுச் சலித்து நிற்கின்றது.

அமெரிக்கக் காகத்தின் எந்த முயற்சிக்கும் லங்காவின் நரி அசைந்து கொடுக்காத நவீன காகம் – நரி கதையை தமக்கே உரிய ஆங்கில சொல்லாட்சியில் அழகாக தருகிறார் அவர் – அதனோடு தொடுத்து இலங்கை அரசியல் நிலைவரங்களையும்.

ஆங்கிலம் புரிந்தவர்கள் அதைத் தேடிப் பிடித்து வாசிப்பார்களாக!

## எலும்புத்துண்டுக்காகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரச கைக்கூலிகளாகச் செயற்பட்டுச் சொந்த மக்களையே சூறையாடி, இறுதிக் கட்ட யுத்தம் நடந்தபோது யுத்தத்தை நிறுத்தினால் விடுதலைப்புலிகளுக்கு ஒட்சிசன் கொடுத்தது போலாகிவிடும் என்று கூறிய புளொட் தலைவர் சித்தார்த்தனுக்குத் தமிழ்த் தேசிய முன்னணியை விமர்சிக்கும் தகுதி கிடையாது என்று முன்னணியின் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஸ் .

ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலம் யாரை வெல்ல வைக்கத் தமிழ்த் தேசிய முன்னணி முயல்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் தெரிவித்தமை தொடர்பில் முன்னணியின் பேச்சாளர் சுகாஸ் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் சட்டத்தரணி சுகாஸ் மேலும் கூறியதாவது:–

"அரச கைக்கூலிகளாகச் செயற்பட்டுச் சொந்த மக்களையே சூறையாடி, இறுதிக் கட்ட யுத்தம் நடந்தபோது யுத்தத்தை நிறுத்தினால் புலிகளுக்கு ஒட்சிசன் கொடுத்தது போலாகிவிடும் என்று கூறி, அரசு வீசிய எலும்புத்துண்டுகளுக்காகத் தமிழினத்தைக் காட்டிக் கொடுத்த சித்தார்த்தனுக்கு ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் தாற்பரியம் புரியாது. தமிழ்த் தேசிய முன்னணியை விமர்சிக்கும் தகுதியும் அவருக்குக் கிடையாது. புளொட் ஒட்டுக் குழுத் தலைவர் சித்தார்த்தன் இதனை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்." – என்றார்.

## விக்டோரியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திகனை அளுத்வெல்ல பகுதியைச் சேர்ந்த 37 வயதான நபரும் உயிரிழந்துள்ளார்.

## ரணில் - மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்சவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு அடுத்த வாரம் நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் மொட்டுக் கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ உட்பட அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலைப் பெறும் மொட்டுக் கட்சியின் முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.

அதேபோல் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் மொட்டுக் கட்சி இரு அணிகளாகப் பிளவுபட்டு நிற்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவரைக் களமிறக்க வேண்டும் என நாமல் உள்ளிட்ட தரப்பினர் வலியுறுத்தி வருகின்றனர். இந்நிலையில், ஜனாதிபதி ரணிலுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்க வேண்டும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உள்ளிட்ட அமைச்சர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலைமையில் மேற்படி சந்திப்பு இடம்பெறவுள்ளது. இதன்போது ஜனாதிபதித் தேர்தல் குறித்த மொட்டுக் கட்சியின் நிலைப்பாடு என்னவென்பது ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வமாகத் தெரியப்படுத்தப்படும் என அறியமுடிகின்றது.

## இலங்கை அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூறியுள்ளார்.

எஞ்சியுள்ள இரண்டு விடயங்கள் தொடர்பில் மீண்டும் ஒருமுறை கலந்துரையாடி கடன் மறுசீரமைப்பு தொடர்பான இணக்கப்பாட்டுக்கு வரவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, சாதகமான முடிவுகள் எட்டப்படும் எனத் தாம் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் ஜனாதிபதியின் பணிக் குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

# 14 வயது மாணவியைத் தன்னுடன் கூட்டிச் சென்ற 17 வயதுச் சிறுவன்

## காத்தான்குடி பொலிஸ் பிரிவில் சம்பவம்




பதினான்கு வயது மாணவியை கடத்திச் சென்ற குற்றச்சாட்டின் பேரில் 17 வயது சிறுவன் ஒருவனை காத்தான் குடிப் பொலிஸார் நேற்றுக் கைது செய் துள்ளனர்.

மட்டக்களப்பு – காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி கிரான்குளத்தைச் சேர்ந்த மேற்படி மாணவியை காதலித்தவர் என்று கூறப் படும் திருகோணமலை குச்சவெளியைச் சேர்ந்த 17 வயது சிறுவன் அந்த மாண வியைக் கூட்டிச் சென்று கொழும் பில் சில நாள்கள் தங்கி இருந்துள் ளான்.

கொழும்பில் சில நாள்கள் தங்கி இருந்தபின் மீண்டும் நேற்று முனதினம் சொந்த இடம் திரும்பி வீட்டில் தங்கி யிருக்கின்றனர் எனக் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் காத் தான்குடி பொலிஸார் சிறுவனைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் பொலிஸா ரால் நீதிவான் முன்னிலையில் முற்படுத் தப்படவிருந்தார்.

அதேவேளை, சம்பந்தப்பட்ட மாணவி மட்டக்களப்பு போதனா வைத் தியசாலையில் வைத்திய பரிசோதனை ளுக்காக சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணைகளை காத் தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# வீட்டு முற்றத்திலிருந்த சிலை விழுந்ததில் சிறுவன் மரணம்!

ஹெட்டிபொல, திக்கலகெதர பிர தேசத்தில் கொங்கிரீட்டால் செய்யப்பட்ட ஒட்டகச்சிவிங்கி சிலை இடிந்து விழுந் ததில் 8 வயதுடைய சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

படுகாயமடைந்த நிலையில் குளியா பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிறுவன் உயிரிழந் துள்ளான்.

அந்தச் சிறுவனின் வீட்டின் முற்றத் தில் வைக்கப்பட்டிருந்த கொங்கிரீட்டால் செய்யப்பட்ட ஒட்டகச்சிவிங்கி சிலையே சிறுவனின் மீது விழுந்துள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசார ணைகளை ஹெட்டிபொல பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கடல் வழி கடத்தல்

இலங்கையின் தெற்கு முனையில் தொந்துரவிலிருந்து சுமார் 246 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளூர் பல நாள் மீன்பிடி இழுவை படகிலிருந்து கைப்பற்றப்பட்ட சுமார் 380 கோடி ரூபா பெறுமதியான 179 கிலோ 906 கிராம் கிரிஸ்டல் மெத்தம்பெட்டமைன் மற்றும் 83 கிலோ 582 கிராம் ஹெரோயின் உட்பட போதைப் பொருள்களை இலங்கைக் கடற்படையினர் காலித் துறைமுகத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றனர்.

இந்த நடவடிக்கையின் போது ஆறு பேரை ஏற்றிச் சென்ற உள்ளூர் பல நாள் மீன்பிடி இழுவை படகு ஆழ்கடலில் இலங்கை கடலோரக் காவல்படையினால் கடந்த வெள்ளியன்று இடைமறிக்கப் பட்டது. அதிலிருந்தே போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

மேலும், நான்கு பேருடன் மற்றொரு உள்ளூர் மீன்பிடி இழுவைப் படகும் படையினரால் கைப்பற்றப்பட்டது. இது நடுக்கடலில் போதைப்பொருள் பரிமாற்றத் திற்காகக் காத்திருந்ததாகச் சந்தேகிக்கப் படுகிறது.

இந்த வருடத்தில் இதுவரையான மூன்றரை மாத காலத்தில் மட்டும் 930 கோடி ரூபா பெறுமதியான போதைப் பொருள்களை இலங்கை கடற்படை மட்டும் கைப்பற்றி இருக்கின்றது என்று தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போது பிடிபட்டுள்ள பெருந்தொகையான போதைப் பொருள்கள் எங்கிருந்து கொண்டுவரப்பட்டன என்ற மூலத்தைப் பற்றிய விவரத்தை கடற் படையோ புலனாய்வுத் தரப்புகளோ வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை.

ஆனால் இந்தியா ஊடாகவே இந்தப் போதைப்பொருள்கள் கடத்தப்பட்டுள்ளன என்று இந்தியத் தமிழ் தொலைக்காட்சி ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருக் கின்றது. இலங்கைக் கடற்படையிடம் இப்படி பிடிபட்ட போதைப் பொருளின் பெறுமதி ஆயிரம் கோடி ரூபாவுக்கும் மேல் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டது. எனினும் இலங்கை கடற்படை வெளி யிட்ட செய்திக் குறிப்பின்படி பிடிபட்ட போதைப் பொருளின் பெறுமதி இந்திய நாணயத்தில் 100 கோடி ரூபாவுக்கும் குறைவு தான்.

போதைப் பொருள் வர்த்தகர்கள், கடத் தல்காரர்கள், பாவனையாளர்கள் மற்றும் பாதாள உலகக் கும்பல்களுக்கு எதிராகப் போர்க்கால நடவடிக்கை ஒன்றையே இலங்கை அரசு 'யுக்திய' என்ற பெயரில் ஆரம்பித்து, கடந்த மூன்று மாதங்களுக் கும் மேல் முழுமூச்சாக முன்னெடுத்து வருகின்றது.

இதன் மூலம் போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பின் முக்கிய மையங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்று கூறப்பட்டாலும், அது எவ்வளவு தூரம் உண்மை என்பது கேள்விக்குறியாகி உள்ளது.

அந்தக் கெடுபிடிகளுக்கு மத்தியிலும், இப்படிப் பெருந்தொகையான போதைப்பொருளைக் கடத்தி வரும் கும்பல்கள் தொடர்ந்தும் தமது அழிவு வேலைகளில் முழு முனைப்பாகத்தான் இருக்கின்றன, போதைப் பொருள் கடத் தல் கட்டமைப்பின் முதுகுத்தண்டு இன்னும் முறிக்கப்படவே இல்லை என்பதே இரண்டொரு தினங்களுக்கு முன்னர் பிடிபட்ட இந்தத் தொகை போதை பொருள் நிரூபித்து நிற்கின்றது.

இந்தக் கடத்தல் இந்தியா ஊடாகவே முன்னெடுக்கப்பட்டது என்ற இந் திய ஊடகத்தின் செய்தி சரியானதாக இருந்தால், இதில் இன்னொரு முக்கிய விடயமும் கவனிக்கப்பட வேண்டியதாகின்றது.

இலங்கையின் தென்முனையில் இருந்து தெற்கே ஆழ்கடலில் 246 கிலோ மீற்றர் தொலைவில் வைத்துத்தான் இந்த போதைப்பொருள் கடத்தல் படகு இலங்கை கடற்படையால் வழிமறிக்கப் பட்டிருக்கின்றது.

அப்படியாயின், இந்தியாவிலிருந்து இலங்கையைக் கடந்து தென்முனைக்கு கீழ் பல நூறு மைல்களுக்கு அப்பால் சென்று, அங்கிருந்து கடத்தல் படகு களை சுற்றிக் கொண்டு வரும் ஒரு கடல் மார்க்கத்தையே கடத்தல்காரர்கள் பயன்படுத்துகிறார்கள். இந்தியாவுக்கு நெருக்கமாக இருக்கும் இலங்கையின் வடக்கு - கிழக்குக் கடலோரப் பகுதி களை தவிர்த்து என்பதுதான் அதன் அர்த்தம்.

போதைப் பொருள் கடத்தல் கலங் களை வழிமறிக்க இலங்கை தனது கட லின் நாலாபுறத்திலும் எந்நேரமும் கண் வைத்துக் காத்திருப்பது தவிர்க்க முடியாத கட்டாயமாகிவிட்டது.

# தமிழகத்தில் திராவிடத்தின் பெயரால் பண்பாட்டினை அழிப்பதற்கு முயற்சி

## நெல்லையில் பிரதமர் மோடி உரை

“இண்டியா கூட்டணியில் தி.மு.க, காங்கிரஸின் சித்தாந்தம் வெறுப்பினால் உருவாக்கப்பட்டுள்ளது. திராவிடத்தின் பெயரால் தமிழகத்தின் பாரம்பரியத்தை, பண்பாட்டை அழிக்க நினைக்கிறார்கள்.”

– இவ்வாறு நெல்லையில் நடந்த பிரச்சார பொதுக் கூட்டத்தில் பிரதமர் மோடி குற்றம்சாட்டினார்.

மக்களவைத் தேர்தல் பிரச்சாரத்துக்காக மீண்டும் தமிழகம் வந்துள்ளார் பிரதமர் மோடி. விருதுநகர், நெல்லை, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி தொகுதிகளில் போட்டியிடும் பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக நெல்லை அம்பாசமுத்திரம் பகுதியில் நடைபெறும் பிரச்சாரத்தில் அவர் கலந்துகொண்டார் .

இதன்போது அவர் உரையாற்றுகையில்,

“இந்தக் கூட்டத்தின் உற்சாகத்தையும் வரவேற்பையும் பார்த்து தி.மு.க. மற்றும் காங்கிரஸின் இண்டியா கூட்டணிக்கு தூக்கமே தொலைந்திருக்கும். உங்கள் ஆதரவுக்கு தலைவணங்குகிறேன்.

தமிழ் புத்தாண்டில்தான் பா.ஜ.க. தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டது. அதில் தமிழகத்துக்கான பல திட்டங்கள் உள்ளன. மோடியின் உத்தரவாதம் என்று அதனை படிப்பவர்கள் பலரும் பாராட்டுகிறார்கள். ஒவ்வொரு பிரிவினரையும் யோசித்து தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. வளர்ந்த தமிழகம்தான் வளர்ந்த பாரதமாக மாறும் என்ற நம்பிக்கையோடு தேர்தல் அறிக்கையை தயாரித்துள்ளோம்.

கடந்த 10 வருடங்களாக பா.ஜ.க. மிகக் கடுமையாக உழைத்து நல்ல திட்டங்களை கொண்டுவந்துள்ளது. அதில் ஒன்று நெல்லைக்கான வந்தே பாரத் ரயில். அதனால், பலர் நன்மையை பெற்றுவருகின்றனர். தற்போது தெற்கிலும் புல்லட் ரயில் சேவை தொடங்க திட்டமிட்டு கொண்டிருக்கிறோம். புதிய அரசு அமைந்தவுடன் அதற்கான பணிகள் தொடங்கும். கடந்த 10 ஆண்டுகளில் தமிழகத்தின் தாய்மார்கள் மோடியை ஆதரிக்கிறார்கள் என்று எல்லோரும் ஆச்சரியப்படுகின்றனர்.



அரசியல் வித்தகர்களுக்கு இதற்கான காரணம் தெரியவில்லை. காரணம் என்னவென்றால், தாய்மார்கள் படும் துன்பத்தை உணர்ந்து வைத்துள்ளேன். அதற்கான திட்டங்களை செயல்படுத்தி வருகின்றேன். தாய்மார்களுக்கு தொண்டு செய்ததால் எனக்கு இந்த அன்பு கிடைத்து வருகிறது.

தமிழ் மொழியை, கலாச்சாரத்தை நேசிப்பவர்கள் பா.ஜ.கவையும் நேசிக்க ஆரம்பித்துவிட்டார்கள். தமிழ் மொழிக்கு உலக அங்கீகாரத்தை பெற்றுவருவதாக பா.ஜ.க. தேர்தல் அறிக்கையில் உறுதியளிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் புராதன சின்னங்கள் உலகப் புகழ் பெறும். உலகம் முழுவதும் திருவள்ளுவர் பண்பாட்டு மையம் உருவாக்கப்படும்.

இண்டியா கூட்டணியில் தி.மு.க, காங்கிரஸின் சித்தாந்தம் வெறுப்பினால் உருவாக்கப்பட்டுள்ளது. திராவிடத்தின் பெயரால் தமிழகத்தின் பாரம்பரியத்தை, பண்பாட்டை அழிக்க நினைக்கிறார்கள். அது செங்கோல், ஜல்லிக்கட்டு ஆகியவற்றை தி.மு.க, காங்கிரஸ்/ம் எப்படி எதிர்த்தார்கள் என்பதிலேயே தெரியும்.

தமிழகத்துக்கு வரும்போதெல்லாம் பா.ஜ.கவுக்கு மாபெரும் உற்சாகம் கிடைக்கிறது. இந்தியா தன்னிறைவு பெற வேண்டும் என நினைத்த இந்தப் பகுதியைச் சேர்ந்த வ.உ. சிதம்பரம் பிள்ளை தான் எங்களுக்கு ஊக்கம் கொடுக்கிறார். அவர் காட்டிய வழியில் தான் பாதுகாப்புத் துறையில் இந்தியா தன்னிறைவு பெற்று வருகிறது. தமிழகத்தில் பாதுகாப்பு வழித்தடத்தை உருவாக்கியுள்ளோம்.” – என்றார்.

# பா.ஜ.க. தேர்தல் அறிக்கையில் புதிய அறிவிப்புகள் இல்லை

## ப.சிதம்பரம் கூறுகிறார்



“14 நாள்களில் 15 லட்சம் பரிந்துரைகளை பரிசீலித்ததாக சொல்கிறார்கள். இதற்கு அவர்களுக்கு கின்னஸ் சாதனையை அளிக்க வேண்டும். மத்திய அரசின் நடப்பு திட்டங்கள், புதிய திட்டங்களாக சொல்லியுள்ளார்கள். பா.ஜ.க. தேர்தல் அறிக்கையில் புதிய அறிவிப்புகள் எதுவும் இல்லை.”

– இவ்வாறு முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக காரைக்குடியில் செய்தியாளர்களை சந்தித்த முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம்,

“காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை நான்கு மாதங்களாக தயாரிக்கப்பட்டது. ஆனால், பா.ஜ.க. தேர்தல் அறிக்கை 14 நாள்களில் தயாரிக்கப்பட்டது. மார்ச் 30 இல் தான் ராஜ்நாத் சிங் தலைமையில் தேர்தல் அறிக்கை குழு அமைக்கப்பட்டது. 14 நாள்களிலேயே தேர்தல் அறிக்கை வெளியிட்டுள்ளது.

14 நாள்களில் 15 லட்சம் பரிந்துரைகளை பரிசீலித்ததாக சொல்கிறார்கள். இதற்கு அவர்களுக்கு கின்னஸ் சாதனையை அளிக்க வேண்டும். மத்திய அரசின் நடப்பு திட்டங்கள், புதிய திட்டங்களாக சொல்லியுள்ளார்கள். பா.ஜ.க. தேர்தல் அறிக்கையில் புதிய அறிவிப்புகள் எதுவும் இல்லை. உதாரணத்துக்கு இந்தியாவில் ஏழ்மை ஏறத்தாழ அகன்றுவிட்டது என்று சொல்லியுள்ளது நிதி ஆயோக். நாட்டில் 5 வீதமானோர் ஏழ்மை நிலையில் இருக்கிறார்கள் என்பதை ஏற்க முடியாது. அதனால்தான் 80 கோடி மக்களுக்கு இலவச ரேஷன் பொருள்களை அறிவித்துள்ளது பா.ஜ.க.

பா.ஜ.க. உண்மை கூற்றை மறைக்க பார்க்கிறது. அடுத்ததாக, எல்லா ஊர்களுக்கும் குழாய் மூலம் தண்ணீரே சென்று சேராத நிலையில் குழாய் மூலம் எரிவாயு கொண்டு செல்வதாகக் கூறுவது வேடிக்கையாக உள்ளது.

இந்தியாவை இரண்டு ஆபத்துகள் சூழ்ந்துள்ளன. இந்திய ஜனநாயகத்துக்கு, சகிப்பு தன்மைக்கு, சக வாழ்வுக்கு எதிராக இரண்டு ஆபத்துகள் எழுந்துள்ளன. ஒன்று ஒரு நாடு ஒரு தேர்தல், இன்னொன்று பொது சிவில் சட்டம். இது இரண்டு பேராபத்து. மக்களை பிளவுபடுத்திவிடும். இந்தியாவை சர்வாதிகார பாதையில் செலுத்தும். ஒரு கட்சி தான் நிலைத்து நிற்கும். மற்ற கட்சிகள் எல்லாம் அழிக்கப்பட்டுவிடும்.

இந்த இரண்டு திட்டத்தையும் அமுல் செய்வோம் என்று பா.ஜ.க. தனது தேர்தல் அறிக்கையில் மீண்டும் சொல்லியுள்ளது. மக்கள் மிகுந்த எச்சரிக்கையாக வாக்களிக்க வேண்டும். இந்த இரண்டு தான் அவர்களுக்கு சர்வாதிகார பாதையில் இந்தியாவை கொண்டு செல்ல வழிவகுக்கும். எனவே மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.” – என்றார்.

# அவுஸ்திரேலியா சிட்னியில் தேவாலயத்திற்குள் பாதிரியார் உட்பட நால்வர் மீது கத்திக் குத்து







அவுஸ்திரேலியா சிட்னியின் புறநகர் வேக்லியில் உள்ள தேவாலயத்திற்குள் பாதிரியார் உட்பட நால்வர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தாக்குதல்தாரி கைது செய்யப்பட்டுள்ளார் என நியூ சவுத் வேல்ஸ் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் காயமடைந்தவர்கள் அவசர சேவைகள் மூலம் சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக 50 மற்றும் 30 வயதுடைய இருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இந்த கொடூர தாக்குதலின் காட்சிகள் சமூக வலைதளங்களில் பகிரப்பட்டுள்ளன.

ஆலயத்தில் பாதிரியார் உரையாற்றிக் கொண்டிருக்கையில், முன்பாக சென்ற கறுப்பு நிற உடையணிந்த ஒருவர் அவரை பலமுறை கத்தியால் தாக்கியுள்ளார்.

முன்னதாக, கடந்த சனிக்கிழமையன்றும், சிட்னியின் வெஸ்ட்ஃபீல்ட் போண்டி சந்திப்பு வளாகத்தில், மேற்கொள்ளப்பட்ட கத்திக் குத்து சம்பவத்தில் ஆறு பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# காசாவின் அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் தாக்குதல்; 5 பேர் பலி



காசாவின் மத்திய பகுதியில் உள்ள அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதலில் 20 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.


அத்துடன், காசாவின் வடக்கு பகுதியில் உள்ள அகதிகள் முகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

காசாவில் உள்ள விவசாய நிலங்கள், பண்ணைகள், வெதுப்பகங்கள் போன்றவற்றையும் இஸ்ரேல் தாக்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், காசாவிற்கு மனிதாபிமான உதவிகள் வழங்குவதை இஸ்ரேல் கட்டுப்படுத்தி வருகின்றது.

காசா பகுதியில் பட்டினி மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

# பப்புவா நியூ கினியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்




பப்புவா நியூ கினியின் வடக்குப் பகுதியில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

இது ரிக்டர் அளவுகோலில் 6.5 மெக்னிடியூட்டாக பதிவாகியுள்ளது.

இந்த நில அதிர்வு நியூ பிரிட்டன் தீவின் கிம்பே பகுதியில் இருந்து கிழக்கு – தென்கிழக்கே 110 கிலோ மீற்றர்தொலைவில், 64 கிலோமீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

எனினும், இதனால் ஆழிப்பேரலை எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை என அமெரிக்க நிலநடுக்க அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# கொரோனாத் தொற்றுத் தொடர்பில் சுகாதார அமைச்சின் ஆலோசனைகள்

கொரோனா (கோவிட்) தொற்று பற்றிய உலக சுகாதார நிறுவனம் மற்றும் இலங்கை சுகாதார அமைச்சின் ஆலோசனைகள் தொடர்பாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெளிவுபடுத்தியுள்ளார்.

யாழ் மாவட்டத்தில் நீண்ட காலத்திற்கு பின்னர் கொரோனோ தொற்று காரணமாக பெண் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் மக்கள் மத்தியில் தேவையற்ற சந்தேகங்களை தீர்க்கும் வகையில் இந்தத் தகவலை தனது சமூக வலைத்தளத்தில் அவர் வெளியிட்டுள்ளார்.

இதன்படி 2023 ஒக்டோபர் 10 ஆம் திகதி முதல் கீழ்வரும் 7 விடயங்கள் சுகாதார அமைச்சினால் சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டு பின்பற்றப்படுகிறது.

1.கோவிட் தொற்று ஏற்பட்டவர்களுக்கு ஏனைய சுவாசத் தொற்று நோய்கள் ஏற்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்ற அதே உரிய பாதுகாப்பும் பராமரிப்பும் வழங்கப்பட வேண்டும். பொருத்தமான சிகிச்சையும் வைத்தியசாலையில் வழங்கப்படும்.

(பொதுவாக சுவாச தொற்று வருத்தம் இன்னொருவருக்கு இலகுவாக பரவலாம். ஆகவே சுவாசத் தொற்று உடையவர்கள் உரிய அடிப்படை சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறே தொற்று உடையவருக்கு அருகில் இருப்பவர்கள் மற்றும் பராமரிப்பவர்கள் உரிய சுகாதார பழக்க வழக்கங்களைப் பேண வேண்டும்.)

2. எதாவது நோய் ஒன்றின் சிகிச்சைக்கு முன்னர் அல்லது சத்திர சிகிச்சை ஒன்றிற்கு முன்னர் கோவிட் தொற்றும் இருக்கின்றதா என பரிசோதனைகள் செய்யப்படுவதில்லை.

3. கோவிட் தொற்று உடையவரிற்கு அருகில் இருந்தவர்களிற்கு அல்லது அவருக்கு அருகில் சென்று சிகிச்சை அளித்தவர்களுக்கு கோவிட் தொற்று இருக்கின்றதா என பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

4. இருமல் மற்றும் தடிமன் போன்ற சுவாசத் தொற்று ஏற்பட்டவர்கள் இன்னொருவருக்கு தொற்று ஏற்படாத வகையில் உரிய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். குறிப்பாக அதிக எவில் ஒன்றுகூடும் இடங்களில் உரிய முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

5. கோவிட் இறப்பு ஏற்படும் போது உரிய சுகாதார விதிகளைக் கடைப்பிடித்து வீடுகளில் இறுதிச் சடங்கை செய்யமுடியும்.

6. சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவின் அறிவுறுத்தலின் அடிப்படையில் சமுதாயத்தில் கோவிட் தொற்று இருக்கின்றதா என பலருக்கு பரிசோதனைகள் செய்யப்படுவதில்லை.

7. தனியார் சிகிச்சை நிலையங்களும் இந்த நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.




# கல்முனையில் விபத்து

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதியில் அக்கரைப்பற்றை நோக்கி பயணித்த சிறிய ரக காரொன்று வேக கட்டுப்பாட்டை மீறி கடந்த திங்கள் மாலை விபத்துக்குள்ளானது.

இதனால்தான் மாநகர சபையினால் அண்மையில் அழகுக்காக வைக்கப்பட்டிருந்த பூச்சாடிகள் பல சேதத்திற்குள்ளாகின்.

வாகனம் சேதமடைந்தது. வாகனத்தில் பயணித்த எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

விபத்து சம்பந்தமாக கல்முனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# வவுனியா தாலிக்குளத்தில் மதுபோதையில் கைகலப்பு

(கே.வசந்தன்)

வவுனியா, தாலிக்குளம் பகுதியில் மது போதையில் இருவருக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பின் காரணமாக ஒருவர் காலில் படுகாயமடைந்துள்ளார் எனப் பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

வவுனியா, தாலிக்குளம் பகுதியில் வசிக்கும் இருவருக்கு இடையில் மது போதையில் வாய்தர்க்கம் ஏற்பட்டு அது கைகலப்பாக மாறியுள்ளது.

இதன்போது, ஒருவர் மண்வெட்டியினை எடுத்து ஒருவரின் காலில் கொத்தியுள்ளார். இதனையடுத்து காலில் கடும் காயங்குள்ளான 27 வயது நபர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பூவரசன்குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# பொன்னாவெளி சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக சகல மக்களும் அணிதிரள்வோம்!


## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி அழைப்பு

பொன்னாவெளியைச் சுண்ணக்கல் அகழ்வுக்குத் தாரை வார்ப்பதற்கு எதிராகவும் எமது வளமான பிரதேசங்கள் அந்நிய சக்திகளினால் அபகரிக்கப் படுவதற்கு எதிராகவும் அனைத்து மக்களும் அணிதிரள்வது இன்று அவசியமாகி உள்ளது.

- இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வயலும் கடலும் இணைந்து எமது விவசாயிகளுக்கும் மீனவ மக்களுக்கும் வாழ்வளித்து வரும் பிரதேசம் பூநகரியின் பொன்னாவெளியாகும். வளம் மிக்க அப்பிரதேசம் அந்நிய பல்தேசியக் கம்பனியான டோக்கியோ சீமெந்துக் கம்பனிக்கு சுண்ணக்கல் அகழ்வுக்காகத் தாரைவார்க்கப்படுவதை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

நாடு முழுவதும் இருந்து வரும் எமது வளங்களை அந்நிய பல்தேசியக் கம்பனிகளுக்கும், கோப்பிரேட் நிறுவனங்களுக்கும் விற்றும், நீண்டகாலக் குத்தகைக்குக் கொடுத்தும் தேசிய பொருளாதாரத்தை சிதைத்து, நாட்டின் அனைத்து மக்களையும் நவகொலனிய



அடிமைகளாக்கி வருவதையே கடந்த 45 வருடகால அரசமைப்பும் அதன் கீழான நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையும் கச்சிதமாக முன்னெடுத்து வந்துள்ளன.

அதன் தொடர்ச்சியினைத் தமது எஞ்சியுள்ள ஆட்சிக் காலத்தினுள் ரணில் - ராஜபக்ஷ ஆட்சியினர் செய்து முடிக்க முன்நிற்கின்றனர். அதில் ஒன்றே பூநகரியின் வளமான பொன்னாவெளி வயல் பிரதேச நிலங்களை டோக்கியோ சீமெந்து ஆலைக்குத் தாரை வார்ப்பதாகும்.

அபிவிருத்தித் திட்டங்கள், பொருளாதார மறுசீரமைப்பு போன்ற கவர்ச்சிகரமான பெயர்களில் நாட்டின் வளங்கள் அந்நியர்களுக்கு தாரைவார்க்கப்பட்டு வந்துள்ள அவலத்தினாலேயே நாட்டின் பொருளாதாரமும் மக்களின் வாழ்நிலையும் என்றுமிலாதவாறு மோசமடைந்து எண்பது லட்சம் மக்கள் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆனால் நாட்டு வளங்களை விற்ற ஆட்சிகளின் அமைச்சர்களும், உயர் அதிகாரிகளும் கோடி கோடியாகச் செல்வம் தேடிக் கொண்டனர். இவ்விடத்திலேயே உலகப் பிரசித்தி பெற்ற மேற்கோளான "உலகின் ஒவ்வொரு பெரும் செல்வத்திற்குப் பின்னாலும் பெரும் குற்றம் மறைந்திருக்கும்" எனும் அழியா உண்மை துலக்கம் பெறுகிறது.

ஆதலினால் பொன்னாவெளியைச் சுண்ணக்கல் அகழ்வுக்குத் தாரை வார்ப்பதற்கு எதிராக அப்பிரதேச மக்கள் கடந்த நூற்றி நாற்பது நாள்களுக்கு மேலாக முன்னெடுத்து வரும் எதிர்ப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தையும் அவர்களது நியாயமான கோரிக்கைகளையும் ஆரம்பம் முதலே எமது கட்சி ஆதரித்தும் அந்தப் போராட்டத்தில் பங்குகொண்டும் வந்திருக்கிறது.

எமது வளமான பிரதேசங்கள் அந்நிய சக்திகளினால் அபகரிக்கப் படுவதற்கு எதிராக அனைத்து மக்களும் அணிதிரள்வது இன்று அவசியமாகி உள்ளது. - என்று உள்ளது.

# இலங்கை - இஸ்ரேல் விமான சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது

இலங்கை மற்றும் இஸ்ரேல் இடையிலான விமான சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என அந்த நாட்டுக்கான இலங்கை தூதுவர் தெரிவித்துள்ளார்.

தற்போது காணப்படும் மோதல் நிலைமைகளால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நாள்களில் இஸ்ரேலுக்கு பயணிப்பதற்காக விமான ஆசனங்களைப் பதிவு செய்த இலங்கையர்கள், அந்தந்த நிறுவனங்களைத் தொடர்புகொண்டு பயணத் திகதியை மாற்றிக்கொள்ளுமாறு இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் அறிவுறுத்தியுள்ளார்.



# யாழிலிருந்து தூர இடங்களுக்கான சேவை நகரின் புதிய பஸ் தரிப்பிடத்தில் இருந்து!

## ஒருங்கிணைந்த நேர அட்டவணையில் மே 1 தொடக்கம் பரீட்சார்த்த சேவையில்

யாழ் நகரிலுள்ள புதிய பஸ் தரிப்பிடத்திலிருந்து ஒருங்கிணைந்த நேர அட்டவணையில் அரச மற்றும் தனியார் பஸ் சேவைகளை ஆரம்பிப்பதற்கான பரீட்சார்த்த நடவடிக்கையை எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் தலைமையில், ஆளுநர் செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தின் போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

வட மாகாண பிரதம செயலாளர், ஆளுநர் செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை அலுவலகர்கள், தனியார் பஸ் உரிமையாளர்கள், இலங்கை போக்குவரத்து சபை அலுவலகர்கள், பொலிஸார் உள்ளிட்ட அதிகாரிகள் இன்றைய கூட்டத்தில் கலந்துக் கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய பஸ் தரிப்பிடத்திலிருந்து அரச மற்றும் தனியார் நெடுந்தூர பஸ் சேவைகளை முன்னெடுப்பது தொடர்பில் நிலவிவரும் சிக்கல்களுக்கு தீர்வு காணும் பொருட்டு ஆளுநரால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை, வடமாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவனாக் இதன்போது சமர்பிக் கப்பட்டது.

இந்நிலையில் புதிய பஸ் தரிப்பிடத்திலிருந்து ஒருங்கிணைந்த நேர அட்டவணையில் நெடுந்தூர பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கான நேர அட்டவணையை தயாரிக்க கால அவகாசம் தேவை என பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதற்கமைய 15 நாள்கள் கால அவகாசம் வழங்கப்பட்டதுடன், எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி முதல் ஒருங்கிணைந்த நேர அட்ட வணையின் கீழ், நெடுந்தூர சேவையில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பஸ்களின் போக்குவரத்து சேவைகளை முன்னெடுப்பதற்கான பரீட்சார்த்த நடவடிக்கையை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

# சிங்கள மொழியைக் கற்பதால் நாங்கள் எம் உரிமையை இழந்து விட மாட்டோம்

## முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சுகிர்தன் கருத்து

(த.சுபேசன்)

சிங்கள மொழியைப் பயில்வதன் ஊடாக நாம் எமது தேசியத்தை விட்டுக் கொடுப்பதாகவோ அல்லது உரிமையை இழப்பதாகவோ அமைந்துவிடாது என முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சூரிய நிறுவகத்தினால் சாவகச்சேரி நகரில் ஆரம்பிக்கப்பட்ட இலவச சிங்கள மொழிக் கற்கைநெறியின் ஆரம்ப நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி கருத்தைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

எமது நாட்டில் நிலவுகின்ற இனப்பிரச்சனைக்கு பிரதான காரணமாக காணப்படுபவர்கள் அரசியல்வாதிகள். அவர்கள் தமது பதவிகளைத் தக்க வைப்பதற்காக இனங்களுக்கு இடையே முரண்பாடுகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

இனப்பிரச்சினைக்கு இரண்டாவது காரணமாக காணப்படுவது மொழி.

எமது நாட்டில் உள்ள இரண்டு இனங்களுக்கும் இரண்டு மொழிகளும் தெரிய வந்தால் நாட்டில் பாதிப் பிரச்சினைகள் தீர்ந்துவிடும்.

அந்தவகையில் முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரியவினுடைய சூரிய நிறுவகம் கலாசார ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் இலவச மொழிக் கற்கை நெறிகளைப் பயிற்றுவித்து வருகின்றது.

சிங்கள பிரதேசத்தில் நீண்ட காலமாக சிங்கள மாணவர்களுக்கு இந்த நிறுவனம் ஊடாக தமிழ் கற்பிக்கப்படுகின்றது.

சிங்கள மொழியைக் கற்பதால் நாம் எமது தேசியத்தை விட்டுக் கொடுப்பதாக அது அமையாது. அதேவேளையில் எமது உரிமைகளை இழக்கப்போவதும் இல்லை.



மொழிகளைக் கற்பதன் ஊடாக எமது ஆளுமையை விருத்தி செய்ய முடியும்.

எனவே மாணவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தை பயனுள்ளதாக மாற்றியமைக்க வேண்டும். – என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.04.2024


மேஷம்

இன்று சலிப்பூட்டும் நாளாக இருக் கும். என்றாலும், திட்டமிட்டு புத்தி சாலித்த னத்துடன் செயலாற்றினால் உங்கள் முயற்சியில் வெற்றி நிச்சயம்.

பணியில் இன்னல்களை சந்திப் பீர்கள். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் நீங்கள் மேற்கொண்ட பணிகளை கவனமாக கையாள வேண்டியது அவசியம். உங்கள் துணையுடன் தேவையற்ற விவாதங்கள் ஏற்படாமலிருக்க அமைதி காக்க வேண்டும். உரையாடும் போது வார்த்தைகளில் கவனம் தேவை.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். உபரி பணத்தை முடிந்த அளவு சேமிக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். என்றாலும் நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள். தலைவலி மற்றும் முதுகு வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.


ரிஷபம்

இன்று முனேற்றகரமான பலன்கள் கிடைக்கும். நேரத்தை பயனுள்ள விஷ யங்களுக்கு பயன் படுத்துவீர்கள். உங்களின் சிறந்த தகவல் பரிமாற்றம் பிறரை காந்தம் போல கவர்ந்திழுக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப் படுத்தும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் பணிக்கான நற்பெயரும் அங்கீகாரமும் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும். உங்கள் துணையை மகிழ்ச்சியாக வைத்திருப்பீர்கள்.

நிதியைப் பொறுத்த வரை இன்று சுதந்திரமான நிலை காணப்படும். எதிர்கால நலனுக்கான பயனுள்ள நிதி சம்பந்தமான முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படுகின்றது.


மிதுனம்

இன்று எதையும் இலேசாக எடுத்துக் கொள்ளவேண்டும். இன்று நீங்கள் உங்களை உற்சாகப்படுத்திக் கொள்ள வேண்டும். இன்று உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும்.

பணியிடச் சவால்களை சந்திக்க பொறுமை அவசியம். பணியில் வெற்றி பெறுவதற்கு அதிக முயற்சிகள் செய்ய வேண்டும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக் கத்தை பராமரிக்க அனுசரணையான போக்கு தேவை. உங்கள் துணையை நகைச்சுவையான அணுகு முறையோடு அணுகி அவரை மகிழ்விக்க வேண்டும்.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். இன்று செலவுகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.


கடகம்

இன்று உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். இறைவழிபாடு, ஸ்லோகம் கூறுவது ஆன்மீக ஈடுபாடு ஆறுதலைத் தரும். இன்று அதிக பொறுப் புகளும் மன உளைச்சல்களும் இருப்ப தாக உணர்வீர்கள். உங்கள் செயல் திறன் உங்களுக்கு திருப்தியை அளிக்காது. பணிச் சூழ்நிலை உங்களுக்கு சாதகமாக இருக்காது.

குழப்பமான மன நிலை காரணமாக உங்கள் துணையுடன் நல்ல உறவுமுறையை பராமரிக்க மாட்டீர்கள். இதனால் இருவருக்கும் இடையிலான தகவல் பரிமாற்றம் பாதிக்கப்படும். இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். பெரிய அளவிலான முதலீடுகள் செய்ய எடுக்கும் முடிவுகளை தவிர்க்கவும்.


சிம்மம்

இன்று ஆன்மீகத்தில் ஈடுபடலாம். அமைதியாக இருக்க ஒரே வழி பிரார்த் தனை ஆகும்.

இன்று பணிச் சூழ்நிலை உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் கடுமையாக நடந்துகொள்வீர்கள். இதனால் உறவின் மகிழ்ச்சி பாதிப்படையும்.

பணப் புழக்கும் குறைந்து காணப்படும். அதிகரிக்கும் செலவுகளைச் சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

தொடை மற்றும் கால் வலியால் அவதிப்படுவீர்கள். உடற்பயிற்சி உங்களை திடமாக வைத்திருக்க உதவும்.


கன்னி

இன்று பரபரப்பாக காணப்படுவீர்கள். உங்கள் வளர்ச்சி கண்டு மகிழ்வீர்கள். உங்கள் நலனை மேம்படுத்தும் முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

பணியிடத்தில் சாதகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும். உங்கள் செயல் திறன் அதிகரித்துக் கொள்வதற்கான புதிய வழிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடனான அன்புப் பிணைப்பு வலுப்பெறும் வகையில் அன்பை வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இருவரும் மகிழ்ச்சியான இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதி நிலைமை திருப்தி அளிக்கும். நீண்ட கால நிலுவை தொகைகள் உங்கள் கைக்கு வந்து சேரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். தேக ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிப்பீர்கள்.


துலாம்

திட்டமிட்ட முறையான அணுகு முறை மூலம் இன்றைய நாளை மதிப்பு மிக்கதாக்குவீர்கள். உங்கள் சிறந்த தகவல் பரிமாற்ற திறன் மூலம் சிறந்ததை சாதிப்பீர்கள். உங்கள் முயற்சியில் வெற்றி பெற புத்திசாலித் தனத்தை பயன்படுத்துங்கள்.

உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடன் நல்லுறவு காணப்படும். உங்கள் நேர்மையான அணுகுமுறை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சி, இனிமை, நகைச் சுவை என உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே அன்பு அதிகரிக்கும்.

இன்று நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமாக இருக்கும். சிறிய அளவிலான கடன்கள் வாங்கி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள்.


விருச்சிகம்

இன்று தேவையற்ற மனக் கவலைகள் காணப்படும். அதனை தவிர்க்கவும். நேர்மையான எண்ணங் களை மேற்கொள்ளுங்கள்.

நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். இது ஏற்படாமல் இருக்க கவனம் தேவை.

மனக் குழப்பங்கள் அதிகம் காணப்படுவதால் அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைத்துக்கொள்ள நீங்கள் உங்கள் மனதை அமைதியாக வைத்திருக்க வேண்டும்.

இன்று நிதிவளர்ச்சிக்கு உகந்த நாள் அல்ல. சில இழப்புகள் காரணமாக ஏமாற்றத்தை சந்திப்பீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பது கடினம். கால் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 16.04.2024

## தனுசு

இன்று அமைதியும் கட்டுப்பாடும் தேவை. முடிவுகள் எடுப்பதற்கு முன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்கவும். பிரார்த்தனை மற்றும் நல்ல இசை மனதிற்கு ஆறுதலும் திருப்தியும் அளிக்கும்.

பணியிடத்தில் கூடுதல் பொறுப்பு காரணமாக பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள். பணியிடத்தில் அசௌகரியம் காணப்படும்.

உங்கள் துணையிடம் அகந்தை போக்கை தவிர்க்க வேண்டும். இதனால் உறவு வலுப்படும். உங்கள் துணையுடன் அனுசரித்து போக வேண்டும்.

இன்று பண வரவுக்கு உகந்த நாள் அல்ல. பொறுப்புகள் அதிகமாக இருப்பதன் காரணமாக இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இது உங்களுக்கு வருத்ததை அளிக்கும்.

## கும்பம்

இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். லாபங்கள் அதிகரிக்கும். புத்திசாலிதனத்தை பயன்படுத்தினால் வெற்றி நிச்சயம்.

உங்களின் நம்பகமான சிறந்த பணி காரணமாக நற்பெயர் அதிகரிக்கும். உங்கள் திறமைகள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

இருவரிடையே காணப்படும் பிணைப்பும் அன்பை பகிர்ந்து கொள்ளும் தன்மை காரணமாக உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கமும் மகிழ்ச்சியும் காணப்படும். இன்று பணப்புழக்கம் சிறப்பாக காணப்படுகின்றது. லாபகரமான முதலீட்டிற்கான முயற்சி உங்களுக்கு நல்ல பலனைத் தரும். இன்று தேக ஆரோக்கியம் சிறந்து காணப்படும். இன்று இன்பமாக இருப்பதன் காரணமாக ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.

## மகரம்

இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுக்கலாம். சமயோசிதமாக செயலாற்றலால் இன்று உற்சாகமாக இருக்கலாம்.

உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும். உங்கள் மேலதிகாரியிடமிருந்து எதிர்பாராத ஆதரவு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவர்க்கும் இடையே புரிந்துணர்வு அதிகரிக்கும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

ஆரோக்கியம் சிறந்து காணப்படும். மனம் மற்றும் உடல் ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும்.

## மீனம்

இன்று உற்சாகமான சூழ்நிலை காணப்படும். என்றாலும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். சரியாகத் திட்டமிட்டால் நற்பலன்களைக் காணலாம்.

பணியிடத்தில் உங்கள் சக பணியாளர்களுடன் பிரச்சினைகள் உண்டாகும். பொறுமையுடன் இருந்தால் அதனை சமாளித்து உங்கள் பணிகளை ஆற்றலாம்.

தகவல் பரிமாற்றத்தில் இருக்கும் குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேற்றுமை காணப்படும். நல்ல புரிந்துணர்வு ஏற்பட வேறுபாடு பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. பணப்பற்றாக்குறை காணப்படும். உங்கள் தேவைக்காக கடன் வாங்க நேரலாம். அதிகரிக்கும் செலவுகள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

